# THIRUMARAI AASAAN



**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385



**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 30 MAY 2017 Issue - 5


ஆசிரியர் உரை

## உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று

இப்பாழுலகை மீட்கும்படியாக மானிட ரூபமெடுத்து வானத்திலிருந்து இறங்கி வந்த இயேசுவானவர் நன்மை செய்கிறவராகப் பெலஸ்தீனா தேசம் முழுவதும் சுற்றித் திரிந்தார் என்பது வேதம் வெளிப்படுத்தும் ஓர் உண்மை. அப்படி நடந்து திரிந்த இயேசுவானவர், எண்ணிலடங்கா அற்புதங்கள் செய்ததோடு ஏராளமான காரியங்களை உபதேசங்களாகப் போதித்தார். அவர் தம் வார்த்தைகளை நாம் குனிந்து கவனித்தால், அவை ஒரே விதமாக இல்லாமல் ஒரு பெரிய கலவையின் கூறாகக் காணப்படுகிறது. ஆம், அவைகளில் பாசமும், பரிதாபமும் இருக்கும்; நேசமும், நெருக்கமும் இருக்கும், உரிமையும், உருக்கமும் இருக்கும்; கனிவும், கண்டிப்பும் இருக்கும், எச்சரிப்பும், எதிர்பார்ப்பும் இருக்கும்; அத்தோடு ஏக்கமும், ஏமாற்றமும் கூட இருக்கும். இப்படித்தான் அவருடைய பிரசங்கத்தின் பாணியும், உபதேசத்தின் தன்மையும் இருந்தது. ஜனங்களின் சரீரத் தேவைகளின் ஆழத்தை அறிந்தவராகவும், அதைவிட முக்கியமாக, அவர்களின் ஆவிக்குரிய அவசியங்களின் நாடித்துடிப்பை உணர்ந்தவராகவும் இருந்தார். இவைகளினடிப்படையில் தனது உபதேசங்களை அமைத்தபடியால் தான், இன்றளவும் உலகம் அவரை ஓர் ஒப்பற்ற பெரும் போதகர் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட இயேசுவானவர்தான், ஒரு சமயம் மிகுந்த ஏமாற்றமடைந்தவராய், **உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று,** என்று கண்ணீர் மல்கக் கூறியுள்ளார். இப்பூமியின் வாழ்க்கையில் ஒரு காரியத்தைச் செய்வதற்கும், செய்யாமலிருப்பதற்கும் மனது மிகவும்

முக்கியம். ஒன்றைச் செய்தே ஆக வேண்டுமென்ற மனது இருக்குமானால், இமயம் கூட சருகு போல தோன்றும். அதே நேரத்தில், ஒன்றைச் செய்யக் கூடாது என்று நினைத்துவிட்டால் துரும்பு கூட உத்திரமாகக் காட்சி தரும். குறிப்பாக, ஆவிக்குரிய வாழ்க்கையில் மனமில்லையானால் ஓர் அங்குலம் கூட நகர முடியாது. ஒருவேளை, அப்படியே நகர்ந்தாலும் அங்கே காரியங்கள் உருப்படியாய் இருக்காது. இந்த உண்மையைப் பச்சையாக உணர்த்திருந்தபடியால் தான், ஆண்டவருக்கு முன்னோடியாய் வந்த யோவான் ஸ்நானகனும், இயேசுவும் **மனந்திரும்புங்கள், மனந்திரும்புங்கள்** என்று கத்தி கத்திப் பிரசங்கத்தினர்.

சரி, இப்பொழுது, நம்முடைய இயேசுவானவர், **உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று** என்று எப்பொழுது சொன்னார், யாரைப் பார்த்துச் சொன்னார், எங்கிருந்து சொன்னார், ஏன் சொன்னார் என்பது பற்றியெல்லாம் கொஞ்சம் தெரிந்து கொண்டால், இத்தலைப்பைச் சிறப்பாக அறிந்து கொள்வதற்கும், இதிலிருந்து தேவன் இம்மாதம் வெளிப்படுத்த விரும்பும் பாடங்களைப் புரிந்து கொள்வதற்கும் மிகுந்த ஒத்தாசையாக இருக்கும். ஆகவே, நமது வழக்கத்தின்படியாக உள்ளே செல்லுவோம்.

சுமார், மூன்றரை ஆண்டுகள் பரலோக தேவனின் திருப்பணியை ஓய்வு ஒழிச்சலின்றிச் செய்து வந்த இயேசுவின் பூமிக்குரிய வாழ்வின் நாட்கள் முடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. கொல்கொதா மலையின் உச்சிக்கு பாரச் சிலுவையோடு ஊர்ந்து செல்லச் சில நாட்கள் தான் எஞ்சி இருந்தது. அப்பொழுது தான் எருசலேமின் குடிகளைப் பார்த்து, குறிப்பாக தேவலாயத்தைப் பார்த்து இப்படியாகக் கதறியுள்ளார். **எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று** (மத் 23:37) என்று.

இப்படி மனம் குமுறி இயேசுவானவர் எங்கிருந்து கூறினார் என்பது பற்றி இரு வேறு கருத்துக்கள் உள்ளன. மத்தேயு 24 : 1 ல் இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப் போகையில் என்றுள்ளதால், தேவாலயத்திலிருந்து தான் கூறினார் என்பது முதல் கருத்து. மற்றொன்று, அவர், சிலுவைக்கு முன்பாக, கடைசி முறை ஒலிவ மலைக்குச் சென்று, அங்கிருந்து இறங்கி வருகையில், சுமார் 500 அடி தூர இடைவெளியில், கெதரோன் பள்ளத்தாக்கிற்கு இப்புறத்தில் நின்று கொண்டு, ஏராளமான ஜனங்கள் சூழ்ந்திருக்கையில் கம்பீரமாகக் காட்சி தந்த எருசலேம் தேவாலயத்தைப் பார்த்துக் கூறினார் என்பது. இந்த இரண்டாவது கருத்து

சரி என்றால், நானும், என் துணைவியும் அந்த இடத்தை நேரில் பார்த்துள்ளோம். அன்றைக்கிருந்த தேவாலயத்தை, எருசலேமின் வேறு எந்தப் பகுதியிலிருந்து பார்த்தாலும் அதைவிடச் சிறப்பான கோணத்தில் பார்க்க முடியாது. அங்கிருந்து, **எவ்வளவு நெஞ்சுநோக இயேசுவானவர் இப்படிக் கூறியிருப்பார்** என்பதை நினைத்தாலே மெய் சிலிர்க்கிறது.

இந்த எருசலேமுக்காக, எருசலேமின் ஜனங்களுக்காகத் தேவன் ஆதியிலே இருந்து செய்த காரியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆதியாகம புத்தகத்திலேயே இடம் பெற்று, இன்றளவும் உலகின் முதன்மைப் பட்டணங்களுள் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து வருவது எருசலேம் மாத்திரமே. வேறு எதற்கும் இச்சிறப்பு கிடையாது. இப்பட்டணத்தை வேதாகமம் **பரிசுத்த ஸ்தலம்** (சங். 46 : 4) என்றும், **உண்மையுள்ள நகரம்** என்றும் ( ஏசாயா1 : 21) **பரிசுத்த நகரம்** ( மத். 4 : 5 ) என்றும் அழைக்கிறது.

இப்படி தேவனுடைய இருதயத்தில் இடம் பிடித்த பட்டணமாக இருந்து, பரிசுத்தம், உண்மை என்ற உன்னத வார்த்தைகளோடு சம்பந்தப்பட்ட ஒன்றாக இருந்தாலும், இதன் செயல்பாடு தேவனுக்குப் பிரியமானதாக தொடர்ந்து இருக்கவில்லை. இயேசு வருவதற்குப் பலகாலம் முன்பாகவே, தேவனுக்கு விரோதமான பாதையில் பயணம் செய்ய ஆரம்பித்ததோடு, தேவ திட்டத்திற்கு எதிராகச் செய்யவும் தன்னில் துணிகரம் கொண்டுவிட்டது. தேவன், தன்னுடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களைத் தொடர்ந்து எச்சரித்து வந்தார். **எருசலமே, நீ இரட்சிக்கப்படும்படிக்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு, எந்த மட்டும் அக்கிர நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும்** (எரே 4 : 14) என்றும், இன்னும், எரேமியா 6 : 8 -ல் **எருசலேமே, என் ஆத்துமா உன்னை விட்டுப் பிரியாதபடிக்கும், நான் உன்னைப் பாழும் குடியற்ற தேசமும் ஆக்காத படிக்கும் புத்தி கேள்** என்றும் கூறியுள்ளார்.

தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்காதிருந்த எருசலேமுக்காகவும், பூமியின் ஏனைய மக்களுக்காகவும் தான், தன் கடைசி கட்ட முயற்சியாகத் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பி அவருடைய திருவார்த்தைகளுக்காகிலும் செவி கொடுப்பார்களென்று எதிர்பார்த்தார். **அவருக்கும் அவர்கள் செவி கொடுக்கவில்லை.** மத் 23 : 37 ம் வசனத்தில் இயேசு ஆண்டவர் எத்தனை தரமோ என்று கூறி, தான் எடுத்த முயற்சி எவ்வளவு அதிகமானது என்பதை வெளிப்படுத்துவதோடு, எடுத்த முயற்சிகளின் தன்மை பற்றியும் இப்படியாகக் கூறுகிறார். **கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்க்கும் வண்ணமாக** என்று. நம்ம ஊர்க் கோழிகள் தன் குஞ்சுகளைப் பாதுகாப்பதற்குப் படும் பிரயாசைகளைக் காட்டிலும், வனாந்திரப் பகுதிகளை அதிகம் கொண்ட பெலஸ்தீனா தேசத்துக் கோழிகள் அதிக விழிப்போடிருந்து பாதுகாக்க செயல்பட வேண்டும். ஏனெனில், உடனடியாக ஓடி ஒதுங்குவதற்கு முட்புதர்களோ,

பதுங்குவதற்குத் தோதான அடர்ந்த செடி கொடிகளோ அங்கு இல்லை. அதுபோல அவர்கள் மீது தான் கொண்டிருந்த நேசம் எவ்வளவு கரிசனையுடன் கூடியது என்பதை இதன் மூலம் விளக்கியுள்ளார்.

இவ்வளவுக்கதிகமாகப் பிரயாசை எடுத்தும் அவர்கள் திருந்தவில்லை திருந்துவதற்கு மனம் இல்லாமற் போயிற்று. யோவான் நற்செய்தியாளரும் இதைத்தான் கூறுகிறார். **அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை** என்று ( யோவா 1 : 11 ). அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதால் அவர்கள் மீது வரப்போகும் விளைவை எண்ணிப்பார்த்தார். வசனம் 38ல் இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. எருசலேம் பாழாகிப் போகும் என்பதையும், அதின் குடிகள் அழிக்கப்படுவார்கள் என்பதையும் நினைக்கும்போது அவருக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. ஏனெனில், உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அவர் வராமல் (யோவா 3 : 17). இழந்துபோன எருசலேமின் குடிகள் போன்றோரை இரட்சிக்கும்படியாகவே வந்தார் ( லூக். 19 : 10 ). ஆகவே தான், எருசலேமை நினைத்து, எப்படி அந்தரத்தில் தொங்க நேர்ந்த தன் துன்மார்க்க மகன் அப்சலோமுக்காகத் தாவீது புலம்பினானோ, அது போலவும் ( 2 சாமு 18 : 10,33 ) சொல்லப்போனால், அதை விடப் பலமடங்கு மேலாகவும் எருசலேமுக்காகப் புலம்பினார்.

சரி, பழைய ஏற்பாட்டின் காலத்திலும், இயேசுவின் நாட்களிலும் தான் இந்த எருசலேமின் குடிகள் தங்கள் பிடரியைக் கடினப்படுத்தினார்களென்று நாம் நினைக்கத் தேவையில்லை. இயேசு அவர்களுக்காக வந்து, வாழ்ந்து, மரித்து, உயிர்த்துப் பரமேறி சுமார் 2000 ஆண்டுகள் ஆகிவிட்ட இன்றைய நாட்களிலும், அவர்களின் நிலை அப்படியே தான் உள்ளது. பூச்சக்கரத்தின் எத்திசையிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் எண்ணிலடங்கா ஜனம், இயேசு ஆண்டவரின் அருமை பெருமைகளை அறிந்து, உணர்ந்து, ஏற்று, அவர் பிறந்த மண்ணைப் பார்க்க நாள்தோறும் பயபக்தியோடு வந்து கொண்டிருக்கும் போது, எருசலேமிலும், பெலஸ்தீனாவிலும் வாழும் யூதர்கள், அதைப் பற்றிய எவ்வித தொடுதலுமின்றி, பழமையை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பதை நேரில் பார்க்க, உண்மையில் பரிதாபமாகவே இருந்தது.

சாலமோன் கட்டிய தேவாலயத்தைச் சுற்றிலுமிருந்த மதில் சுவரின் எஞ்சிய பகுதி என்று ஒரு **குட்டிச்சுவர்** இருக்கிறது. அதற்கு **புலம்பல் சுவர்** (Wailing Wall ) என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்தப் பொல்லாத யூதர்கள், ஆண்களும் , பெண்களுமாக திரளாக வந்து, அந்தக் குட்டிச் சுவரைத் தொட்டுக் கொண்டும், பிடித்துக் கொண்டும், அதில் மோதிக் கொண்டும் **ஓவென அழுகிறார்கள்.** மேசியாவே வாரும், தேவாலயத்தை திரும்பவும் கட்டும் எருசலேமில் வீற்றிருந்து அரசாளும் என்று முறையிடுகிறார்கள். இதே எருசலேமின் ஒரு பக்கம், மேசியாவாகிய இயேசு இரட்சகர் வந்து

போனதற்குப் பலமான சாட்சியாக திறந்து கிடக்கும் கல்லறை இருக்கிறது. ஆனால், மறுபக்கமோ, மேசியாவே வாரும் என்று ஒப்பாரி. இந்தக் காட்சியைப் பார்க்கிறதற்கு எவ்வளவு வேதனையாயிருக்கும் தெரியுமா? ஆக, இன்றைக்கும் நிலைமை அப்படித்தான் உள்ளது.

எருசலேமின் குடிகள், இயேசுவை ஏற்றுக் கொள்ளாததற்கு நிறைய காரணங்களை நாம் அடுக்க முடியும் என்றாலும், அவைகளில் பிரதானமாக ஒரு மூன்றை நாம் பார்த்து நமக்கான சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

## I தேவனுடைய வார்த்தைகளை அற்பமாக எண்ணினார்கள்

எருசலேமின் குடிகள் இயேசுவுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான காரணங்களில் முதலாவதாக, அவர்கள் வேத வசனங்களை அற்பமாய் எண்ணியதைக் கூறலாம்.

மோசேயைக் கொண்டு பிரமாணங்களை இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த தேவன், அப்பிரமாணங்களுக்கு அவர்கள் என்ன மரியாதை கொடுக்க வேண்டுமென்பதையும் வெளிப்படுத்தி விட்டார் ( உபா 5 : 1). மோசேயின் காலத்துக்குப் பிறகும் தேவன் அவருடைய வார்த்தைகளின் படியாகச் செய்வது மிகவும் அவசியம் என்பதை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார். **இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிரு என்று** (யோசு 1: 8). ஆனால், இவர்களுக்கோ, வேத வாக்கியங்கள் என்ன சொல்லுகிறதென்பதைக் குறித்த பாரம் ஒரு போதும் பெரிதாக இருந்ததில்லை.

வேத வாக்கியங்களைக் கொண்டு இவர்கள் இயேசுவை அறிந்திருக்க முடியுமா என்று பார்த்தால், நிச்சயமாக முடியும் என்பதே பதிலாக உள்ளது. எப்படியெனில்,**....என்னைக் குறித்து சாட்சியிடுகிறவைகள் வேத வாக்கியங்கள்** என்று இயேசு அழுத்தமாகக் கூறியுள்ளார். (யோவா 5 : 39 ) இயேசுவின் கூற்றை பிலிப்பு மெய்யாக்கியுள்ளதைப் பாருங்கள். **பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்பு, கபடற்ற உத்தம இஸ்ரவேலனாகிய நாத்தான்வேலைக் கண்டு, நியாயப்பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம் என்றான்.** ( யோவா 1 : 45 ). அருமையானவர்களே, தேவனையும், அவருடைய குமாரனையும், அவருடைய சித்தத்தையும் அறிந்து கொள்வதற்கு வேத வாக்கியங்கள் கண்டிப்பாக போதுமானது. வேதவாக்கியங்களில் உள்ளதை எருசலேமின் குடிகள் புரிந்துகொள்ள முடியாமற் போனது, வேதவாக்கியங்களின் குறைபாடல்ல. மாறாக இயேசுவானவர் மத்தேயு 13 : 15 ல் சொல்லியுள்ளது போல அவர்கள் இருதயம் கொழுத்திருந்ததே காரணம்.

சரி, இப்படிப்பட்ட, வேதவசனங்களின் சாட்சியும் போதாதென்று, யோவான் ஸ்நானகனும், இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்தார் (யோவா 1 : 34). இந்த யோவானின் சாட்சியையும் ஜனங்கள் ஏற்றுக் கொள்ளாதபோது, இயேசு சொன்னதைத் தான் கொஞ்சம் பாருங்களேன்! **யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்து வருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது** என்றார் (யோவா 5 : 36 ). இதற்கு மேலும், இயேசு தேவனுடைய குமாரனென்று ஏற்றுக்கொள்வதற்கு வேறு என்ன தான் சாட்சி வேண்டும்? சொல்லுங்கள்!

எருசலேமின் குடிகளும், யூதர்களும் இப்படித் தரம் தாழ்ந்து நடத்திருக்கிறார்களே என்று எண்ணி, வியந்து நிற்கும் அருமையான தேவனை நேசிக்கும் ஜனமே! நம்முடைய வாழ்வில் நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? வேத வாக்கியங்களுக்கு எப்படிப்பட்ட மரியாதை கொடுத்து வாழ்ந்து கொண்டுள்ளோம்? **வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்** என்று இயேசு சொல்லியுள்ளாரே, நாம் உண்மையில் ஆராய்ந்து பார்த்துக் கொண்டுள்ளோமா? வேதவாக்கியங்களின் ஒட்டு மொத்த போதனை என்ன என்றும், இன்றைக்கு என்னைக் கட்டுப்படுத்தும் உபதேசம் எது என்பதையும் நம்முடைய ஆராய்ச்சியில் கண்டுபிடித்துவிட்டோமா? வேத வாக்கியங்களில் தான் நித்திய ஜீவன் உண்டு என்பது எப்பொழுதும் நம் நினைவில் நிற்க வேண்டும்.

அன்பானவர்களே, வேத வாக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனித கோட்பாடுகளுக்கும், பாரம்பரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தபடியால் தான், குட்டிச் சுவற்றைக் கட்டிப்பிடித்து அழ வேண்டிய அவசியம் யூதர்களுக்கு வந்திருக்கிறது. ஒருவேளை , நாமும் அவர்களைப் போல புதிய ஏற்பாட்டு உபதேசத்தை அற்பமாக எண்ணி, இயேசு கட்டின ஒன்றான மெய் சபையைப் பற்றி ( மத் 16 : 18 ) அக்கறையில்லாமல் வாழ்வோமானால், நரகத்திற்குப் போய் அங்கே நித்திய காலமாய் அழவேண்டிய நிலை வந்து சேரும். ஆகவே, இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு மதிப்பளித்து நமது ஆன்மீக வாழ்வை நடத்துவோம்.

### II தங்களுடைய காரியங்களில் நாட்டமுடையவர்களாக இருந்தனர்

எருசலேமின் குடிகள், இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான இரண்டாவது காரணமாக, அவர்கள் தங்களுடைய காரியங்களில் அதிக நாட்டமுடையவர்களாயிருந்ததைக் கூறலாம்.

பூமியில் வாழும் ஒருவன் பூமிக்கடுத்த சில காரியங்களில் நாட்டமுடையவனாக இருப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஏனெனில், இப்பூமியில், தேவன் அனுமதிக்கிற காலமெல்லாம் அவன் வாழ்ந்தாக வேண்டும். அதே நேரத்தில், தேவனுக்கடுத்த காரியத்திற்கும், சொந்தக் காரியத்திற்குமுள்ள வேறுபாடு தெரிந்தவனாகவும், எதற்கு என்ன முக்கியத்தும் கொடுக்க வேண்டுமென்பதில் தெளிவுள்ளவனாகவும் இருக்க வேண்டும். இந்த அறிவு எல்லாருக்கும் இருக்க வேண்டுமென்பது தேவனுடைய விருப்பம், இயேசுவின் எதிர்பார்ப்பு. இதற்காகத்தான், இயேசுவானவர், **ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி அநேகரை அழைப்பித்தான்** என்ற உவமையைச் சொன்னார் (லூக் 14 /அதி ) அவ்வுவமையில் மூன்று பேருமே போக்குச் சொல்லத் தொடங்கி, தங்களுடைய காரியங்கள் தான் பெரிது என்பதை வெளிப்படுத்தினார்.

இயேசுவின் காலத்தில் வாழ்ந்த ஜனங்களுக்கு பக்தி வாழ்வும், ஆராதனைக்குரிய காரியங்களும் கூட ஆதாயத் தொழிலாக மாறிவிட்டது. ஆகவேதான் உலகின் பல பாகங்களிலிருந்து எருசலேமுக்கு வருபவர்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்துவிட்டனர். அன்பான இயேசுவுக்கு, இவர்களின் இந்தச் சுயநலப் போக்கு ஆத்திரத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தியது. சவுக்கெடுத்து அவர்களை விரட்டியதோடு என்னுடைய வீட்டை கள்ளர் குகையாக்கினீர்கள் என்றும் சாடினார் (மத் 21 : 12,13).

இங்கே, நாம் கவனிக்க வேண்டிய ஒரு காரியம் இவர்கள் இப்படிப்பட்ட தேவ விரோதச் செயலைத் தெரியாமல் செய்யவில்லை என்பது. எப்படியெனில், இயேசு லாசருவை உயிரோடே எழுப்பினதற்குப் பிறகு கூடின ஆலோசனைச் சங்கத்தார், நாம் இவனை இப்படியே விட்டுவிட்டால் எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து **நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்களே** என்றார்கள் ( யோவா 11 : 47,48 ). ஆக, இந்தத் திருடர்களின் சிந்தையெல்லாம் தொழில், வருமானம், ஸ்தானம். பக்தி என்பது ஒரு வேஷம். இயேசுவின் வார்த்தைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள மனமில்லாமற் போனதற்கான காரணம் என்னவென்று இப்பொழுது விளங்குகிறதா?

ஆனால், நாம் என்றைக்கு நமது காரியங்களுக்கான சிந்தையைக் குறைத்து, அவருடைய காரியங்களில் நாட்டம் செலுத்துகிறோமோ அப்போது தான் தேவனுக்கடுத்தவைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படியும் மனதைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### III மற்றவர்களுடைய நினைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்

எருசலேமின் குடிகள் இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான, இன்னுமொரு காரணமாக, அவர்கள் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டதைக் கூறலாம்.

இவர்கள் இப்படிச் செயல்பட்டார்கள் என்று நான் கூறவில்லை, வேத வசனங்கள் கூறுகிறது. அதுவும், ஒரு முறை அல்ல, பலமுறை. ஆம்,

யோவான் நற்செய்தியாளனுடைய நூலில், **தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக் கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?** (யோவா 5 : 44 ) என்று இயேசு கேட்டுள்ளார். இன்னும், அதே நூலின் 12 ஆம் அதிகாரம் வசனம் 42,43 சொல்லுவதையும் கவனியுங்கள். **ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்காதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்.** மனிதர்களுடைய எண்ணங்களுக்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்களென்பதற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்?

ஆனால், பழைய ஏற்பாட்டுப் பக்தன் ஆபிரகாமும், புதிய ஏற்பாட்டில் பவுலடியாரும் இக்காரியத்தில் எப்படிச் செயல்பட்டார்களென்று உங்களுக்கு நினைவிலிருக்கிறதா? கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: **நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உன்க்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ** (ஆதி. 12 : 1) என்று அழைத்த போது, அவன் யாருடன் ஆலோசனை செய்தான்? ஊரும், உறவும், நட்பும் என்ன நினைக்குமென்று அவன் எண்ணியிருந்தால், தேவனுடைய வார்த்தைகளுக்குக் அவனால் கீழ்ப்படிந்திருக்க முடியுமா? விசுவாசிகளின் தகப்பன் என்ற பெருமை அவனுக்குக் கிடைத்திருக்குமா? சொல்லுங்கள்.

அருமையானவர்களே, இன்றைய உலகமும், கிறிஸ்தவ சமுதாயமும் ஊருக்கும், உறவுக்கும், நட்புக்கும், மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும், மதிப்பளிக்காமல், தேவனுடைய வார்த்தைகளுக்கு மாத்திரம் செவி கொடுத்துக் கீழ்படிவதில் எந்தளவு சிறந்து விளங்குகிறது? இது தான் சத்தியம் என்றும், இதுதான் இந்த வசனத்தின் பொருள் என்றும், இவைகள் தான் இரட்சிப்பின் திட்டத்துக்கான படிகள் என்றும், இதுதான் இயேசு வாக்களித்துக் கட்டின சபையென்றும் சொன்னால், எத்தனை பேர் அட அப்படியா, இத்தனை நாள் எனக்கு விளங்காமற் போய்விட்டதே என்று சொல்லி உடனே ஏற்றுக் கொள்ளுகிறார்கள்? மணிக்கணக்காகக் கேட்டு விட்டு, வாரக் கணக்காகச் சேர்ந்து படித்துவிட்டு, முடிவெடுக்க மாதக் கணக்கில் நாட்களையும் எடுத்துக் கொண்டு, கடைசியில் என்ன சொல்லுகிறார்கள்? நீங்கள் சொல்லுவதெல்லாம் சரிதான், வசனத்துக்குச் சரியான விளக்கம் கொடுத்தீர்கள். ஆனால், எங்க குடும்பம்...எங்க வேலை...எங்க சபை...எங்க ஊர்...எங்க சமுதாயம்...என்று கூறி அப்படியே இழுக்கிறார்கள் தானே! எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு இப்படியெல்லாம் இழுப்பது எப்படி நியாயமாகும் என்று எண்ணிப்பாருங்கள்?

அன்பானவர்களே, இன்றைய கிறிஸ்தவத்திற்கு உடனடித் தேவை துணிவும், மன உறுதியும் கொண்ட தேவனை நேசிக்கும் ஜனங்கள். அவர்களால் தான் இயேசுவுக்கும், அவருடைய உபதேசத்திற்கும் கீழ்ப்படியும் மனதைப் பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் ஒவ்வொருவரும் அப்படிப்பட்டவர்களில் ஒருவராயிருக்க வேண்டுகிறேன். ஆமென்!.

# பரிசுத்த ஆவியானவரின் பணி

## பரிசுத்த ஆவியானவரை அறிமுகப்படுத்துகிறோம்.

Bro. J.C. சோட்

**ப**ரிசுத்த ஆவி என்றால் யார்? அவர் எங்கிருந்து வந்தார்? இவ்வுலகில் அவருடைய பணி என்ன? இப்படி இன்னும் அவரைப் பற்றி பல காரியங்களை நாம் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

முதலாவதாக, பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தின் மூன்றாவது நபராக இருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன், கிறிஸ்து, அடுத்து பரிசுத்த ஆவியானவர். **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து...** (மத் 28 : 19) என அப்போஸ்தலர்களிடம் கிறிஸ்து கூறிய போதும் அதே வரிசையில் குறிப்பிடுகிறார். மேலும், ஒரே தேவன், ஒரே கிறிஸ்து, ஒரே ஆவி உண்டு என எபேசிருக்கு எழுதிய நிருபம் 4ம் அதிகாரம் 4-6 வசனங்களில் பவுல் கூறுகிறார். ரோமக் கிறிஸ்தவர்களுக்கு அவர் எழுதும்போது, **நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில் நான் போராடுவது போல நீங்களும் என்னோடு கூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினிமித்தமும் ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்** (ரோமர் 15 : 32) என்கிறார். மீண்டுமாக, II கொரிந்தியர் 13 : 14ம் வசனத்தில் இம்மூவரையும் பற்றிக் கூறுகிறார். **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக, ஆமென்.**

தேவன், கிறிஸ்து, பரிசுத்த அவியானவர் என மூன்று பேர் இருப்பதால், சிலர் **திரித்துவம்** எனக் குறிப்பிடுகின்றார். மூன்று தனிப்பட்ட நபர்களாக அவர்கள் இருந்தபோதிலும், அவர்கள் ஒருவரே. இதைப் புரிந்து கொள்ள பலர் சிரமப்படுகின்றனர். மூன்று தேவர்கள் இருப்பதாக நம்ப சிலர் விரும்புகின்றனர். இக்கூற்றை நியாயப்படுத்த, இயேசுவே பிதாவாகிய தேவனாகவும், இயேசுவே பரிசுத்த ஆவியானவராகவும் உள்ளார் எனக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட போதனையானது **இயேசு மட்டுமே** என்ற கொள்கையின் விழைவு. சந்தேகமின்றி, அது தவறு. ஒரு தேவன், ஒரு

கிறிஸ்து, ஒரு பரிசுத்த ஆவி இவர்கள் தனித்தனியான நபர்கள் அல்லது தேவத்துவத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும், மூவரும் ஒருவரே என்பது சாத்தியமா எனப் புரிந்து கொள்ளக் கடினமாக இருந்தாலும், வேதாகமம் இதையே போதிப்பதால் நாம் விசுவாசத்தோடே அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஒன்று எனக்கூறி **திரித்துவம்** என்ற வார்த்தை வசனங்களில் குறிப்பிடப்படவில்லை என்றபோதிலும், **தேவத்துவம்** என அவர்கள் அழைக்கப்படுகின்றனர். அத்தேனே, பட்டணத்தாருக்கு பவுல் போதிக்கும் போது, **நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும் யுத்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது** (அப். 17 : 29) என்றார். தேவனை மறுதலித்தவர்களைப் பார்த்து பவுல் பேசும்போது, **எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை** ( ரோமர். 1 : 20 ) என்று கூறினார். கிறிஸ்துவை குறித்து பவுல், **ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது** ( கொலோ 2 : 9 ) என்று கூறினார். எனவே, இவ்வசனங்களில் பயன்படுத்தப்பட்ட தேவத்துவம் என்பது தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரின் ஒருங்கிணைப்பு ஆகும்.

அப்படியானால், இந்த **தேவத்துவம்** எவ்வளவு காலமாக நீடிக்கிறது? எங்கே ஒருவரைப் பற்றி நாம் படிக்கிறோமோ, அங்கே மற்றவர்களைப் பற்றியும் காணமுடியும். அவர்கள் சிருஷ்டிப்புக்கு முன்பாகவே இருந்தனர் அல்லது ஆரம்பமும், முடிவுமற்ற தன்மையுடைவர்களாக இருக்கின்றனர் என்பதை, சகலமும் உண்டாக்கப்படும்வேளையில் முதல் முதலாக அவர்களைப் பற்றி நாம் படிக்கிறோம். **ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்** ( ஆதி 1 : 1 ) என்று வேதகாமத்தின் முதல் வசனமே கூறுகிறது. எபிரேய மொழியில் தேவன் என்பது பிதாவாகிய தேவன், அவருடைய குமாரன் கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர், ஆகியோரை உள்ளடக்கிய ஒரு பன்மைச் சொல் ஆகும். மீண்டுமாக, சிருஷ்டிப்பைப் பற்றி நாம் படிக்கும் போது, **பின்பு தேவன், நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக . . .** (ஆதி 1 : 26) என்றார். தாவீது எழுதும் போது, **நீர் உம்முடைய ஆவியை அனுப்பும் போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும் ; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்** ( சங். 104 : 30 ) என்றார். **தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வ வல்லருடைய சுவாசம் எனக்கு உயிர்**

**கொடுத்து** ( யோபு 33 : 4 ) என யோபு தெரிவித்தார். **ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதென்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை** ( யோவான் 1 : 1 – 3 ) என யோவான் கூறினார். தேவத்துவத்தின் மூன்று பேரும் ஆதியில் இருந்தனர்; எப்போதும் இருந்து கொண்டிருக்கின்றனர் என்பதை மேற்கண்ட எல்லா வசனங்களின் மூலமாகவும் நாம் தெளிவாகக் காணமுடியும் என நான் நம்புகிறேன்.

**தேவத்துவத்தின்** ஒவ்வொருவரையும் பற்றி நாம் படிக்கும்போது, ஒவ்வொருவரும் ஒரு செயலை அல்லது பணியைச் செய்யக்கூடிய வராயிருந்தனர் என்பதைக் காண முடியும். பழைய ஏற்பாட்டுக் காலம் முழுவதும் மட்டுமன்றி, புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இதைக் காண முடிகிறது. தேவனுடைய வார்த்தைகள் எழுதப்படவும் அவை பாதுகாக்கப்பட்டு நமது காலம் வரை கொண்டு வரப்படவும் பலரை ஏவி அவர்களுக்கு உதவியவர் பரிசுத்த ஆவியானவர் ஆவார். பேதுரு எழுதினார், **இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும், மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம். அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது . தீர்க்க தரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்** ( 2பேதுரு 1: 18-21). தேவத்துவத்தின் மூன்று பேரும் இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை நீங்கள் மீண்டும் காண முடியும். ஆனாலும், குறிப்பாக வேத வசனங்களில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. **வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது** ( II தீமோ 3 : 16, 17 ) என அப்போஸ்தலன் பவுல் எழுதினார்.

பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் 88 இடங்களில் 18 பெயர்களில் காணப்படுவதாகத் தெரிகிறது. அதே நேரத்தில், 264 இடங்களில் 39 வித்தியாசமான பெயர்களால் புதிய ஏற்பாட்டில் அழைக்கப்படுகிறார். இவற்றின் 5 பெயர்கள் இரு ஏற்பாடுகளிலும் பொதுவாகக் காணப்படுகிறது. அதே சமயத்தில் வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் 52 மாறுபட்ட பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

பரிசுத்த ஆவியானவர், ஒருவித மறைபொருளான சக்தியாகவோ அல்லது ஒரு ஆவியாகவோ அடிக்கடி சித்தரிக்கப்படுகிறார். ஆனால், வேதவசனமோ அவரை ஒரு ஆளுமை செய்யும் நபராக வர்ணிக்கிறது. அவர், **உணர்ச்சி வசப்படக் கூடியவர்** (எபே 4 : 30), **சிந்தை உள்ளவர்** (ரோம 8 : 27) **பேசக் கூடியவர்** (Iதீமோ 4 : 1), **நமது பலவீனங்களில் உதவி செய்பவர்** ( ரோம 8 : 26 )... என இன்னும் நிறைய சொல்லிக் கொண்டே போகலாம்.

நீங்கள் பார்க்கிறபடி, பரிசுத்த ஆவியானவரைப் பற்றி கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்கள் நிறைய உண்டு இது ஆரம்பமே. அவரைப் பற்றி தொடர்ந்து அநேக காரியங்களைக் கற்றுக் கொள்வோம். ●

---

## வேதத்தில் ஒன்று முதல் பத்து வரை

| | | |
|---|---|---|
| ஒன்று | – | தேவன் ஒருவரே |
| இரண்டு | – | ஏற்பாடுகள் இரண்டு |
| மூன்று | – | முற்பிதாக்கள் மூவர் |
| நான்கு | – | சுவிசேஷங்கள் நான்கு |
| ஐந்து | – | ஆகமங்கள் ஐந்து |
| ஆறு | – | கற்சாடிகள் ஆறு |
| ஏழு | – | இயேசுவின் சிலுவை வார்த்தைகள் ஏழு |
| எட்டு | – | பேழைக்குள் நோவாவின் குடும்பத்தார் எட்டு |
| ஒன்பது | – | இயேசு ஜீவனை விட்ட மணிவேளை ஒன்பது |
| பத்து | – | கட்டளைகள் பத்து |

பெண்கள் பகுதி

# பெண்ணின் தாலந்து

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளுக்கு அடியாளின் வாழ்த்துக்கள். இம்மாதமும் உங்களோடு சேர்ந்து வேதத்தின் ஆலோசனைகளை கற்றுக்கொள்வதற்கு தேவன் கொடுத்த சிலாக்கியத்திற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

நமதருமை இரட்சகர் இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் உவமைகள் மூலமாக பரத்துக்கடுத்த காரியங்களை போதித்து வந்தார். அதில் ஒரு உவமை (மத். 25 : 15 – 21) முடிய உள்ள வசனங்களில் இடம் பெற்றிருக்கும் தாலந்து உவமை. ஐந்து தாலந்தை பெற்றவன் பத்தாக்கினான். இரண்டு தாலந்து நான்காக்கப்பட்டது. ஒரு தாலந்தை வாங்கினவன் மண்ணில் புதைத்து வைத்தான்.

நம் அனைவருக்குள்ளும் தேவனால் கொடுக்கப்பட்ட தாலந்துகள் உள்ளன. அதை பயன்படுத்தி தாலந்துகளை பெருக்கிக் கொள்வது நம்மேல் விழுந்த கடமை. ஏனென்றால், நாம் பெற்ற தாலந்துகளைக் குறித்து நாம் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். **எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்** ( லூக். 12 : 48 ). நம்முடைய திறமை நமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் நம்முடைய செல்வாக்குகள் இவையாவையும் வைத்து நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். பொதுவாக, மக்கள் ஒருவருக்கொருவர் வேறுபட்டே காணப்படுகிறார்கள். ஒரே மாதிரி பிறக்கும் இரட்டைக் குழந்தைகள் கூட மனதிலும், செயலிலும் வேறுபட்டுக் காணப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். வித்தியாசமான குணங்களைப் பெற்ற நாம் வித்தியாசமுள்ள ஒருவரை மணந்து கொள்கிறோம். ஆமையும், முயலும் போன்று, தந்திரமுள்ள நரியும் சாந்தமுள்ள ஆட்டுக்குட்டியும் போன்றும், சிங்கமும் எலியும் போன்றும் தம்பதிகள் இருப்பதை நாம் வாழ்நாட்களில் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனாலும், பூமியிலே மனிதன் வாழக்கூடிய தன் வாழ்நாட் காலத்தில் பல செயல்களை தலைகீழாக மாற்றி சாதனைகளைப் புரிந்து கொண்டுதான் இருக்கிறான். இவ்வாறு செயல்படுவதற்கு தேவன் பெலத்தைக் கொடுக்கிறார். எனவே, எல்லா மகிமையும் தேவனுக்குத்தான் சேரும். பிரசங்கி இதை மிகவும் அழகாக வர்ணிக்கிறார். **ஒருவனுடைய வேகம், சவுரியம், ஞானம், புத்தி, அறிவு இவை ஒன்றும்**

**அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றாது. சமயமும், தேவச் செயலும் இல்லாவிட்டால் அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ள முடியாது.** (பிரசங்கி. 9 : 11).

பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தில் ஆக்கில்லா, பிரிஸ்கில்லா என்ற தம்பதியரை அறிமுகம் செய்கிறார். தேவன் பயன்படுத்திய தம்பதியராகிய இவர்கள் வியக்க வைக்கும் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள். பிரிஸ்கில்லா " பத்து தாலந்துகளைக் " கொண்ட ஒரு பெண் என்று கூறலாம். இவள் தேவனுக்காக தன்னை அப்படியே ஒப்புக்கொடுத்தவள். தன்னையும், தேவனையும் நேசிக்கக்கூடிய கணவனைப் பெற்றிருக்கும் சிலாக்கியம் பெற்றவள்.

வேதாகமத்திலே சில பெண்களுடைய பெயர்கள் முதலில் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக மிரியாம் (எண் 12 : 1 – 3), இயேவின் தாயாகிய மரியாள் ( லூக்கா 2 : 16 ), பிரிஸ்கில்லா ( அப். 18 : 18 ) ஆகியோர் ஆவர். குடும்பத்திற்கு தலைவன் கணவன் என்பதற்குச் சான்றாக ஆக்கில்லாவின் பெயர் பலமுறை முதலில் இடம் பெற்றிருந்தாலும், பிரிஸ்கில்லாவின் பெயர் அவளுடைய வைராக்கியம், உற்சாகம், ஞானம், பிறருக்குப் பணி புரிந்ததுபோன்ற காரியங்களினிமித்தம் அவளுடைய பெயர் அவ்வப்போது முதலில் இடம் பெற்றிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்தில் இத்தம்பதியரோடு சேர்ந்து மூவரும் கூடாரத் தொழில் செய்தார்கள். பவுலை இவர்கள் இருவரும் தங்கள் வீட்டில் தங்கியிருக்கும்படி அனுமதி கொடுத்தனர். பிறகு கெங்கிரேயாவில் பவுல் தனக்கு பிரார்த்தனை ஒன்றை நிறைவேற்றும்படியாய் இருந்து தலைச்சவரம் பண்ணினபோது பிரிஸ்கில்லாவும் ஆக்கில்லாவும் உடன் இருந்தனர் என்று அப். 18 : 18 ல் வாசிக்கிறோம். பின்பு எபேசு பட்டணத்தில் வேதாகமங்களில் வல்லவனாகிய அப்பொல்லோ என்ற யூதனைக் கண்டு அவனுக்கு தேவனுடைய மார்க்கத்தை திட்டமாய் போதிக்க வேண்டுமென்று விரும்பி தங்கள் வீட்டில் சேர்த்துக்கொண்டார்கள். பிரிஸ்கில்லா தன் வீட்டில் அவனுக்கு இடம் கொடுக்காமல் இருந்திருந்தால் அப்பொல்லோ வேத வாக்கியங்களை ஏற்றுக் கொண்டிருக்க முடியாது. வேதத்தில் வல்லவன், ஆனால் எது உண்மை என்பதை அறியாத ஒரு ஆசானை நாம் பெற்றிருக்க முடியாது. பிரிஸ்கில்லா தன் முயற்சியால் ஆக்கில்லாவுக்கு உடனிருந்து இந்த ஊழியத்தைச் செய்திருக்கிறாள். இங்கே பிரிஸ்கில்லா தானாக எதையும் அப்பொல்லோவுக்கு போதிக்கவில்லை. ஆனால், அவன் போதிக்கப்படும்படியாக எல்லா முயற்சிகளையும் இவள் எடுத்திருக்கிறாள்.

மேலும், பிரிஸ்கில்லா வீட்டில் சபை கூடி வந்தது என்று வாசிக்கிறோம். ஒரு பெண் எந்த அளவு தன் வீட்டை மற்றவர்களுக்கு கொடுத்திருந்தால் அங்கு சபை கூடிவந்திருக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மக்களை நேசித்தாள். ஆத்தும பாரம் இவளுக்கு இருந்தது. இப்படி நிறை குணங்களை தன்னுள்ளே கொண்டவள்தான் இந்த பிரிஸ்கில்லா. அப். பவுல் இவர்களைப் பற்றி கூறும்போது **கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும், ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள். அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டில் கூடி வருகிற சபையையும் வாழ்த்துங்கள்**

பவுலுக்காக தங்கள் கழுத்தை கொடுத்தவர்கள் என்ற பாக்கியத்தை பிரிஸ்கில்லா பெற்றுவிட்டாள். இதை வாசிக்கும்போது நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியும், பெருமையுமாய் இருக்கிறது. தேவன் தனக்குக் கொடுத்த தாலந்துகளை ஞானமாய் பயன்படுத்தி பரிசுத்த பவுலின் வாழ்க்கையை காப்பாற்ற உதவியாயிருந்தாள். தங்கள் கழுத்தைக் கொடுத்தார்கள் என்று கூறும் போது இது சாதாரண ஒரு செயல் அல்ல. தங்கள் வாழ்க்கையையே பவுலுக்காக கொடுத்தார்கள். எவ்வளவு ஓர் அருமையான தம்பதியர்.

அடுத்ததாக 1 கொரி. 16 : 19 – ல் **ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங் கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்** என்று பவுல் கூறுகிறார். கடைசியாக அப்.பவுல் இவர்களை II தீமோ. 4 : 19–ல் குறிப்பிடும்போது, **பிரிஸ்கில்லாக்களுக்கும், ஆக்கில்லாவுக்கும் ஒநேசிப்போருவின் வீட்டாருக்கும் என் வாழ்த்துதலைச் சொல்லு** என்று தன்னால் அதிகம் நேசிக்கப்படும் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். இங்கே ஆவியானவர் பவுலைக் கொண்டு பிரிஸ்கில்லா பெயரை முதலில் எழுத வைக்கிறார்.

இன்றைக்கும் கூட தேவனுக்கென்று சில பிரிஸ்கில்லாக்கள் இருக்கவே செய்கிறார்கள். இன்றைய பிரிஸ்கில்லாக்கள் நமக்கு முன்னோடியாக இருந்த வேதாகமத்தின் பிரிஸ்கில்லாவுக்கு எப்போதும் நன்றியுடைவர்களாக இருக்க வேண்டும். திறமைகளையும், பொறுப்புகளையும் சில பெண்களுக்கு தேவன் கொடுத்து வைத்திருக்கிறார். ஆனாலும்,

எல்லா பிரிஸ்கில்லாக்களுக்கும் ஆக்கில்லாவை போன்று கணவன் கிடைக்கும் சிலாக்கியம் இருக்காது. தன் மனைவியின் நல்ல வேலைகளுக்கு ஆதரவு கொடுத்தான். நல்லவேளை நம் பிரிஸ்கில்லா பேராசை மிக்க அனனியாவுக்கோ, தேமாவுக்கோ, தியோத்திரேப்புவுக்கோ மனைவியாக வாய்க்கவில்லை.

உண்மையாலுமே யார் யாரை ஒன்றாக இணைக்க வேண்டுமென்பதில் தேவன் மிகவும் கவனமாக இருக்கிறார். நமது தேவன் எவ்வளவு நல்லவர் பாருங்கள்!

இந்த பத்து தலாந்தைப் பெற்ற பிரிஸ்கில்லாளுக்கு பயம் என்ற அவி இல்லாதிருந்தது. **தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல்** ( II தீமோத். 1 : 7 ) என்று வாசிக்கிறோம். தேவனுக்கு பயப்படும் பயத்தைத் தவிர, வேறு பயம் நமக்குத் தேவையில்லை. பயம் என்ற ஆயுதத்தால் சாத்தான் நம்மை தோல்வியுறச் செய்து விடுவான். பிரிஸ்கில்லா பல தாலந்துகளைப் பெற்றிருந்தாலும் தன் கணவனை தலைவனாக ஏற்றுக்கொள்ள மறுக்கவில்லை. அவள் அதிகாரத்துக்கு கீழ்ப்படிந்தே இருந்தாள்.

ஆக, இதை வாசிக்கும் அன்பானவர்களே! நாமும் பிரிஸ்கில்லாவைப் போன்று கணவனோடு சேர்ந்து கர்த்தருக்காக வேலை செய்வோம். **பகற்காலமிருக்கு மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்** என்று நமதாண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து யோவான். 9 : 4 – ல் கூறியுள்ளபடி அவருக்காக எல்லாவகையிலும் வேலை செய்வோம். பிரிஸ்கில்லா தனக்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தாலந்துகளைப் பெருக்கிக் கொண்டது போல் நாமும் நம்முடைய சபையிலும் சமுதாயத்திலும் கர்த்தருக்காக பல வேலைகளைச் செய்து நம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவருக்கே அர்ப்பணம் செய்வோம். முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையில் இருந்த பிரிஸ்கில்லாளைப் போன்று இன்றும் சபையில் அநேக பிரிஸ்கில்லாக்கள் தோன்றி சபைக்காக தங்கள் கழுத்தைக் கொடுக்க ஜெபிப்போம்.! ஆமென்!!

## இயேசு - மோசே பற்றி லூக்காவின் கூற்று

**இயேசு :**

செய்கையிலும், வாக்கிலும் வல்லமையுள்ளவர் (லூக்கா. 24 : 19)

**மோசே :**

வாக்கிலும், செய்கையிலும் வல்லவன் (அப். 7 : 22)

வாலிபர் பகுதி

# இயேசு கிறிஸ்துவுக்கு நல் சீடராகுவோம்

சகோ. பென்னி மார்ட்டீன்

பிரியமான வாலிபர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நம்மில் பலர் வாரத்தின் முதல் நாள் தோறும் தேவனைத் தொழுதுகொள்கிறோம். வேதபாடவகுப்புகளில் கலந்துகொள்கிறோம், முடிந்தால் சுவிசேஷக் கூட்டங்களில் கூட கலந்து கொள்கிறோம். ஒரு விசுவாசி என்னும் நிலையில் நாம் அப்படிச் செய்கிறோம். ஆனால் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சீடராக வேண்டுமானால் இது போதாது. **சீஷர்** என்னும் வார்த்தைக்கான பொருள் **கற்றுக்குட்டி** என்பதாகும். ஆனால் அதே நேரத்தில் **சீஷர்** என்பதற்கு குருவை அப்படியே பின்பற்றுபவன் என்றும் பொருள் உண்டு. ஏனென்றால், காலகாலமாக கர்த்தருடைய வார்த்தைகளைக் கற்றுக்கொண்டே இருந்து அவைகளை நாம் நடைமுறைப்படுத்தாவிட்டால் கிறிஸ்துவுக்கு ஒரு போதும் சீடராகவே முடியாது. இன்றைய நாட்களில் பல வாலிபர்கள் சினிமா நட்சத்திரங்களை, விளையாட்டு வீரர்களை, அரசியல்வாதிகளை, மதத்தலைவர்களை குருக்களாக நினைத்துக்கொண்டு, ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு சீடர்களாக விரும்புகிறார்கள். அதனால் எந்த நன்மையும் இல்லை என்பதை நாளடைவில் தான் அவர்கள் அறிந்து கொள்கிறார்கள். பிரியமானவர்களே! நாம் வெறுமனே கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாக மாத்திரம் இருந்தால் அவருக்கு சீடராகவே முடியாது. அதற்கென்று நாம் சில சிரமங்களை எதிர்கொண்டு சீரான வாழ்க்கையை அமைத்துக் கொண்டால்தான் சீஷத்துவத்தின் சீரிய தன்மைகளை ருசிக்க முடியும்.

### I சீஷத்துவத்தின் அடையாளங்கள் :

ஒரு தொழிற்சாலையிலோ, அல்லது அலுவலகத்திலோ வேலை பார்க்கிறவருக்கு அடையாளமாக சீருடை வழங்கப்படுகிறது. அதை அவர் அணிந்து கொள்ளும்போது அந்தக் குறிப்பிட்ட அலுவலகம் அல்லது தொழிற்சாலையின் ஊழியர் என்பதை மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள். நாம் கிறிஸ்துவின் சீடர்கள் என்று அழைக்கப்படுகிறோம். அப்படியென்றால், நம்முடைய அடையாளங்கள் என்ன? நம் குருவாகிய இயேசு கிறிஸ்து **நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால்**

**மெய்யாகவே என் சீடராயிருப்பீர்கள்** என்று சொல்லியிருக்கிறார் (யோவான் 8 : 31). வாழ்க்கையின் பல கட்டங்களில் நாம் பல முடிவுகளை எடுக்கிறோம். அந்த முடிவுகளில் நாம் நிலைத்திருந்து காரியங்களை செய்யாவிட்டால் வெற்றிக் கனியை ருசிக்க முடியாது. உலகப் பிரகாரமாகப் பார்த்தால் ஒரு பொருளை அல்லது ஒரு காரியத்தைப் பெற்றுக்கொள்வது பெரிதல்ல. அதை தக்கவைத்துக் கொள்வதுதான் பெரிது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பிரியமானவர்களே, நாம் கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு அதன்படி அவ்வப்போது நடக்கிறவர்களாயிருந்தால் கிறிஸ்துவுக்கு சீடராக முடியாது. நாம் உபதேசத்திலே நிலைத்திருந்து அதன்படி நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால்தான் மெய்யாகவே கிறிஸ்துவுக்கு சீடர்களாக இருக்கமுடியும்.

அடுத்ததாக, நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பது கிறிஸ்துவின் மெய்யான சீசுர்களாக இருப்பதற்கான அடையாளமாக பார்க்கப்படுகிறது. நம் குருவாகிய இயேசு கிறிஸ்து **நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்** என்று ( யோவான் 13 : 35 ) ல் சொல்லியிருக்கிறார். இன்றைய நாட்களில் அன்பு என்பது காலத்தால் கரைந்து போன ஒன்றாகிவிட்டது போல் தோன்றுகிறது. குடும்பங்களில், சமுதாயத்தில், வேலை செய்யும் இடங்களில் அன்பு தணிந்து போய்விட்டது. ஆனால், நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் கிறிஸ்துவின் சீடர்களென்று உலகத்தின் மக்களால் அடையாளப்படுத்தப்படுவோம். நாம் மற்றவர்களிடத்தில் அன்பாயிருப்பதற்கு காசு, பணம் தேவையில்லையே, ஆம், அன்பாயிருப்பதற்கு பணம் அல்ல மனமே அவசியம் என்பதை நாம் புரிந்து செயல்பட வேண்டும்.

அடுத்ததாக, நாம் கிறிஸ்துவுக்கு மெய்யான சீடர்களாக இருக்க வேண்டுமென்றால் மிகுந்த கனிகளை நம் வாழ்வில் கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையில் கனிகொடுப்பது என்பது ஆவியின் கனியைக் கொடுப்பது, நற்கிரியைகளைச் செய்வது என்று பொருள்படும். கனியற்ற வாழ்க்கையை நாம் வாழ்ந்தால் சீஷத்துவம் என்பது நம் வாழ்வில் எட்டாக்கனியாகிவிடும்.

**II சீஷத்துவத்தின் விலை :**

இவ்வுலகில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு விலை உண்டு. சாலையில் கிடக்கும் கல்லுக்கு ஒரு விலை சுரங்கத்தில் தோண்டி எடுக்கப்படும் வைரக்கல்லுக்கு ஒரு விலை. பிரியமானவர்களே! நாம் கிறிஸ்துவுக்கு சீடராக வேண்டுமென்றால் அதற்கு நாம் விலை கொடுக்க வேண்டும். மிக எளிதாக நாம் சீடராகிவிட முடியாது. நம் வாழ்க்கையில் மதிப்பு மிக்க ஒன்றைப் பெற்றுக்கொள்ள நமக்கு உண்டானவைகளை விற்று அதை பெற்றுக்கொள்கிறோம். கிறிஸ்துவுக்கு சீடராவதென்பது எத்தனை விலை மதிப்பு மிக்கது. அதை அடைய நாம் எதையும் இழப்பது நியாயந்தானே?

இன்றைய நாட்களில் பலர் கிறிஸ்துவினால் உண்டாகும் நன்மைகளை அள்ளிக்கொள்ள அலைகிறார்கள். ஆனால், அதற்கு விலை கொடுப்பதென்று வரும்போது தொலைந்து போய்விடுகிறார்கள். நம் வாழ்க்கையில் எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். நாம் எல்லாவற்றையும் வெறுத்து அவரைப் பின்பற்ற வேண்டும் (லூக்கா 4 : 23). நாம் கிறிஸ்துவுக்கு சீடராக வேண்டுமென்றால், அவருக்காக நாம் பாடுபடவும் பழகிக்கொள்ள வேண்டும். **ஏனெனில், கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது** என்று (பிலிப்பயர் 1 : 29) ல் நாம் வாசிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களில் நூற்றுக்கணக்கான சீடர்கள் இருந்தார்கள். ஆனால் அநேகர் அவருடைய உபதேசம் கடினமான உபதேசம் யார் இதைக் கேட்பார்கள் என்று சொல்லி அவரைப் பிரிந்து போய்விட்டார்கள். பலர் பாடுகள் நிமித்தமாக கிறிஸ்துவை விட்டு விலகி விட்டார்கள். அந்த சீடர்களில் சீராக நிலைத்திருந்த பன்னிரெண்டு பேரைத்தான் நம் ஆண்டவர் அப்போஸ்தலர்களாக மாற்றினார். வாழ்க்கையில் பாடுகள் என்று வரும்போது பதறாமல் கிறிஸ்துவுக்காக நின்றால் தான் நாம் அவருக்கு மெய்யான சீடர்களாக இருக்க முடியும்.

### III சிஷத்துவத்தின் பலன்கள்

நாம் கிறிஸ்துவுக்கு சீடராவதற்கு இத்தனை பாடுகளைப்படும்போது நம்மை அவர் வெறுங்கையோடு அனுப்பி விடுவாரா? நிச்சயமாக இல்லை. இவ்வுலகத்திலும் நிகழ்கால ஆசீர்வாதங்களால் நிரப்புவார். அதாவது இவ்வுலகிலேயே சமாதானம், சந்தோஷம் போன்றவைகளால் நம்மை திருப்பதியாக்குவார். இவைகளுக்காகத் தானே நாம் வாழ்க்கையில் ஏங்குகிறோம். இவைகள் இல்லாமையால் இவ்வுலகில் எத்தனை மனமுறிவுகள்! எத்தனை மனச்சோர்வுகள்! ஆனால், இயேசு கிறிஸ்து இவைகளை நமக்கு பூரணமாகத் தருகிறார். மேலும், வருங்கால ஆசீர்வாதமான பரலோக இன்பத்தையே இன்முகத்தோடு நமக்கு நல்க நசரேயனாகிய இயேசு கிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். இப்போது சொல்லுங்கள் இயேசு கிறிஸ்துவுக்கு நல் சீடராக ஆயத்தமா? ●

சிறுவர் பகுதி

# பறவைகளிடமிருந்து பாடங்கள்

Bro. ஏபில் நாயகம்

எனதருமை சிறுதம்பி, தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ந்து இம்மாதமும் உங்களோடு கூட தேவனுடைய காரியங்களை கற்றுக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சிறுவர் பகுதி மூலமாக நீங்கள் தெரிந்து கொள்ளும் காரியங்கள் உங்களுக்கு உபயோகமாகவே இருக்கும் என நம்புகிறேன்.



சரி, இம்மாதம் பறவைகளிடமிருந்து சில பாடங்களைக் கற்றுக் கொள்ளப்போகிறோம். தேவனுடைய படைப்புகளிலிருந்து மனிதன் அநேக காரியங்களைக் கற்றுக்கொள்கிறான். தேவனுடைய சிருஷ்டிப்பு எல்லாமே நமக்கு பாடம் புகட்டக் கூடியதாக இருக்கிறது. இப்போது பறவைகளிடமிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம் என்றால், பறவைகளுக்கு மாத்திரம் தான் சிறகுகள் இருக்கிறது. சில பறவைகளால் பறக்க முடியாது. ஆனாலும், அவைகளுக்கும் சிறகுகள் இருக்கிறது.

உதாரணமாக, தீக்கோழியால் பறக்க முடியாது, ஆனால், அது அதிவேகமாக ஓடும். அதே போல் அண்டார்டிக்கா பகுதியில் காணப்படும் பென்குயின் பறவையாலும் பறக்க முடியாது, நன்றாக நடக்கக் கூட முடியாது. ஆனால், அவைகளால் நன்றாக நீந்த முடியும். பறவைகளைப் பற்றி இன்னொரு உண்மை என்னவென்றால் உலகிலேயே அதிக வேகமாகப் பறக்கக்கூடியது இந்தப் பறவைகள் தான். சில பறவைகளால் மணிக்கு நூறு மைல் தூரம் கூட பறக்க முடியும். இந்த உலகில் சுமார் 8600 வகை பறவைகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். சில வகைப் பறவைகள் வருடத்திற்கு 22,000 மைல்களுக்கு குடிபெயரும். இது, கிட்டத்தட்ட உலகத்தை வலம் வருவதற்குச் சமமான தூரமாகும். சரி, எப்படி பறவைகளால் இவ்வளவு தூரம் பிரயாணிக்க முடிகிறது? இதற்கான பதில் மிக சுலபமாகும். தேவன் பறவைகளை அவ்விதத்தில் உருவாக்கியிருக்கிறார்! பறவைகளுக்கு எந்த தேசமும் எந்த சட்டத்தையும் கட்டுப்பாட்டையும் விதிக்க முடியாது. அவைகள் சுதந்திரமாக எங்கும் வலம் வரமுடியும்.

வேதாகமத்தில் சுமார் 50 வகையான பறவைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதில் குறிப்பிடத்தக்கவைகள் ஆந்தைகள், தீக்கோழிகள், புறாக்கள், அடைக்கலான் குருவிகள், காடைகள் மற்றும் சேவல் ஆகும். தேவன் பறவைகளை சிருஷ்டிப்பின் போது ஐந்தாவது நாள் சிருஷ்டித்தார். நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து சொல்லும் போது, **ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிர்கள் எல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால் பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்** ( மத்தேயு 10 : 29 - 31 ) என்று சொன்னார். மேலும் ( மத்மேயு 6 : 26 )ல் இயேசு சொல்லும் போது **ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை. அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப் பூட்டுகிறார் அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?** என்று சொன்னார்.

தேவன் உலகத்தில் உள்ள எல்லா பறவைகளையும் போஷிப்பது பற்றி கற்பனை செய்து பாருங்கள்! ஆனால் தேவன் போஷிக்கிறார். அவைகளைப் பராமரிக்கிறார். எனவே சிறுபிள்ளைகளாகிய நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் போது தேவன் நம்மையும் பராமரித்துப் போஷிப்பார். தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க சிறுபிள்ளைகளே நீங்கள் தயாரா?.

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழுமுகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். இதற்கான விடை ஜுன் மாத இதழில்!**

1. யார் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதில்லை?
2. யோசேப்பின் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்றது யார்?
3. பார்வோன் எத்தனை தரம் சொப்பனம் கண்டான்?
4. எகிப்திலே எத்தனை வருஷம் பஞ்சம் உண்டாயிருக்கும்?
5. யாக்கோபின் கர்ப்பிறப்பாகிய யாவரும் எத்தனை பேர்?
6. இஸ்ரவேல் புத்திரர் பார்வோனுக்காக கட்டிய பட்டணங்களின் பெயர் என்ன?
7. மோசே என்ற பெயரின் அர்த்தம் என்ன?
8. சிப்போராளின் தகப்பன் மற்றும் கணவன் பெயர் என்ன?
9. கெர்சோம் யாருடைய குமாரன்?
10. மோசேயிடம் நீங்கள் எப்படிப் போவதில்லை என்று தேவன் சொன்னார்?

**( ஆதியாகமம், யாத்திராகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள் )**

## ஏப்ரல் மாத வினாக்களுக்கான விடைகள்

1 . மெல்கிசேதேக்கு ( ஆதி. 15 : 18 )
2 . நூறு வயது ( ஆதி. 21 : 5 )
3 . மக்பேலா ( ஆதி. 23 : 19 )
4 . பெத்துவேலின் மகள் ( ஆதி. 24 : 24 )
5 . ரெகோபோத் ( ஆதி. 26 :22 )
6 . 17 வயதில் ( ஆதி. 37 : 2 )
7 . யோசேப்பு ( ஆதி. 50 : 25 )
8 . கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் ( ஆதி. 22 : 14 )
9 . யோசேப்பினிமித்தம் ( ஆதி. 39 : 5 )
10 . யோசேப்பினிடத்தில் தானியம் கொள்ளும்படி ( ஆதி. 41 : 57 )

**சரியான பதில் எழுதியவர்கள்**

சாமுவேல் மோகன்தாஸ் – சென்னை
மாலதி ஜெயசெல்வம் – நாகை
ஜான்சி – ஆனைமலை
நிறைமதி – சென்னை.
ஜெமீலா – நெல்லை
பாக்கியசம்பூரணம் – ஈரோடு
ஜெயமணி ஜெய பாண்டியன் – கடலூர்
ஜெயராஜ் ( Tr ) – பொள்ளாச்சி.
அருள்ராஜ் – சென்னை
ஐரின் லீனா – குண்டூர்
ராஜேந்திரன் – கோபி
சந்திராள் – கோபி.
மெர்ஸி ரூபஸ் – சேலம்.

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** ஆவியினால் பிறப்பது என்றால் என்ன?

**பதில் :** இக்கேள்வி நமக்கு மட்டுமல்ல நியாயசாஸ்திரியாக இருந்த நிக்கொதேமுக்கும் கூடப் புரிந்து கொள்ள முடியாததாக இருந்திருக்கிறது. இருப்பினும், பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு இதற்கான விளக்கத்தைக் கற்றுக்கொள்வோம்.

இதை நாம் சரியாகப் புரிந்து கொள்வதற்கு உதவியாக சரீரப்பிரகாரமான பிறப்பு எப்படி நிகழ்கிறது என்று கவனிப்போம். ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு ஒரு ஆணும், ஒரு பெண்ணும் தேவை. ஆணின் வித்து பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தப்படும் போது பெண் கருவுற்று ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஒரு குழந்தை பிறக்கிறது. ஆவிக்குரிய பிறப்பு விஷயத்திலும் கூட இதே விதிதான் பொருந்துகிறது. ஒருவன் ஆவிக்குரிய பிறப்பு அடைய வேண்டுமென்றால் அவனுடைய உள்ளத்தில் ஆவிக்குரிய வித்து செலுத்தப்பட வேண்டும். அந்த ஆவிக்குரிய வித்து எது?

லூக்கா 8 : 11 – ம் வசனத்தில் தேவனுடைய வசனம் விதைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய பிறப்பைப்பற்றி பேதுரு கூறும் போது, **அழிவுள்ள வித்தினாலே அல்ல; என்றென்னைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே** என்று கூறுகிறார் ( I பேதுரு 1 : 23 ). இந்த வசனத்தின் மூலம் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்ட தேவனுடைய வசனங்களே ஜீவனைக் கொடுக்கக்கூடிய ஆற்றல் உள்ள வித்தாக நம்முடைய உள்ளங்களில் ஊன்றப்படுகின்றன என்று தெளிவாகிறது.

ஆவிக்குரிய பிறப்பு என்பது தண்ணீர் முழுக்கினால் ஏற்படுகிறது. இயேசு கிறிஸ்து ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டுமென்று கூறினார். அதன் பொருள் விசுவாசித்து மனந்திரும்பிய ஒரு மனிதன், தண்ணீரில் மூழ்கி எழுந்திருக்க வேண்டும். நாம் எப்படி இரட்சிப்படைகிறோம் என்பதை விளக்க **நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்** என்று பவுல் கூறுகிறார் ( தீத்து 3 : 5).

ஆகவே, மறுபடியும் பிறப்பதற்கு வேதம் சொல்லுகிற ஞானஸ்நானம் இன்றியமையாதது. ஆகவே, ஒரு மனிதன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பதற்கு தேவனுடைய வசனமும் பாவங்களை மன்னிக்கிற கிருபையும் அவசியமாகிறது. கிருபை என்பது தேவனுடைய இலவசமான ஈவு. வசனத்துக்கு கீழ்படிந்து, மனந்திரும்பி திருமுழுக்கு பெற்றுக்கொள்வது மனிதனுடைய கடமை. இதைக்கூட செய்ய நாம் மனமில்லாமல் அதையும் தேவனே செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்.

# தாவீது ராஜாவின் ஆசை

Bro. பாண்டியன்

**கி**றிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களும் சமாதானமும் உண்டாவதாக. வேதத்தில் விசுவாசிகளுக்கு உற்சாகமூட்ட அநேக சாட்சிகள் இருந்தாலும், ஆபிரகாமும், தாவீதும் தேவனிடத்தில் மிகுந்த கிருபை பெற்றவர்களாய் இருக்கிறார்கள். அதனால் தான் தேவன் தம் ஒரே பேறான குமாரனை உலகத்தில் அனுப்பியபோது மாம்சபிரகார சந்ததியில் ஆபிரகாமின் குமாரனும் தாவீதின் குமாரனுமான **இயேசுகிறிஸ்து** என்று அழைக்கப்பட இடங்கொடுத்தார். இதில் தாவீதின் வாழ்க்கையில், மேய்ப்பனாயிருந்த அவனை இஸ்ரயேல் ஜனங்களுக்கு ராஜாவாக தேவன் உயர்த்துகிறார். பொதுவாக, இவ்வுலகில் ஒரு மனிதன் உயர்ந்த நிலைக்கு வரும்போது அந்த வாழ்வின் புகழ்ச்சியில் அல்லது இன்பத்தில் ( தன் பழைய ஸ்தானத்தை மறந்து ) திளைப்பார்கள். அவர்களுடைய நோக்கங்களும், ஆசைகளும் புதிய வாழ்க்கையில் மென்மேலும் ஈடுபடவே அவர்களை வழி நடத்தும். ஆனால், தாவீதின் வாழ்க்கை அப்படியிராமல் அவன் சாதாரண நிலையில் இருக்கும்போது தேவனிடத்தில் அன்பும் விசுவாசமுமாய் எப்படி இருந்தானோ அதேபோல் உயர்ந்த நிலைக்கு வந்தபோதும் அவன் மனம் தேவனையே நாடியது.

சங்கீதம் 27 : 4ல் **தேவனிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன் என்றும்... என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்** என்றும் தாவீது தன் ஆசையைத் தெரிவிக்கிறார். தாவீது ஒரு அரசனாக இருப்பதால் ஆளுகையில் நேரத்தை செலவழிக்கவும், பொழுது போக்குளில் ஈடுபடவும், போர்களில் திட்டமிட்டு ஜெயித்து புகழைத் தேடிக் கொள்ளவும் அவனுக்கு அநேக வழிகள் இருந்தது. ஆனால், அவன் மனம் தன் உயர்வுக்கு காரணமாய் அமைந்த தேவனிடத்திலேயே வாஞ்சையாய் இருந்ததைப் பார்க்கிறோம். இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள் மூன்று நாளைக்குள்ளே அதை எழுப்புவேன் என்று தன் சரீரத்தைப்பற்றிக் குறிப்பிட்டார் ஆண்டவர். சரீரமாகிய சபைக்கு அவரே தலையாய் இருக்கிறார் என்கிறார் பவுல். ஆக ஆலயம் என்ற பதம் கிறிஸ்துவின் சபையாரைக் குறிப்பதைக் காண்கிறோம். அப்படிப்பட்டவர்கள் பொதுவாக பொருளாதாரக் கஷ்டங்களினாலும், குடும்ப்பிரச்சனைகளை சமாளிக்க முடியாமலும் அங்கு வந்து தங்கியிருக்கிறார்கள். ஆனால் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் ராஜாவாகவும், செல்வத்தில் குறைவில்லாத சூழ்நிலையிலும் தாவீதின் மனம் தேவனுடைய ஆலயத்தை நாடியது சிறப்பானது அல்லவா?

துன்மார்க்கர் மனம் பொல்லாப்பை செய்ய விரும்பும் என்று நீதி 21 : 10ல் காண்கிறோம். அப்படிப் போல இஸ்ரயேல் ராஜா ஆகாப் (I ராஜா 21ம் அதிகாரம் ) தன் அரண்மனை அருகே இருந்த நாபோத் என்பவனின் திராட்சைத் தோட்டத்தின் மீது ஆசைவைத்தான். அதைப் பெற்றுக்கொள்ளத் தன் மனைவியின் ஆலோசனையின்படி நாபோத்தை கொலை செய்தான் என்று காண்கிறோம். தாவீதின் குமாரன் அப்சலோம் தாவீதுக்கு விரோதமாக எழும்பிய போது தாவீது விலகி சென்றார். அப்போது சீமேயி என்ற மனிதன் தாவீதை அசிங்கமாகத் திட்டினான் (2 சாமு 16 : 5). பிற்பாடு தாவீது ராஜ்யபாரத்திற்கு வந்தபின் அவன் மன்னிப்புக் கேட்டபோது தாவீது பெருந்தன்மையாக மன்னித்தார் ( 2 சாமு 19 : 23 ). காரணம், அவன் மனம் தேவன் மீது கொண்டிருந்த அன்பு என்று காண்கிறோம். அதேபோல் தன் குழந்தை வியாதிப்பட்டு மரணப்படுக்கையில் இருந்தபோது உபவாசித்து இராமுழுதும் தரையில் விழுந்து கிடந்த தாவீது; அப்பிள்ளை மரித்தபின் எழுந்து, ஸ்நானம் பண்ணி, எண்ணெய் பூசிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து, பணிந்து கொண்டான். 2 சாமு 12 : 20. மனிதனுக்கு பெரிய இழப்பு நேரிடும் போது அவன் கடவுளைக் கூட தூஷிப்பதைக் கேட்டிருக்கிறோம். ஆனால், தாவீது தேவசித்தத்திற்குக் கீழ்படிந்து தன்னை மாற்றிக் கொண்டதைக் காண்கிறோம்.

எனக்கன்பானவர்களே நமக்கு அப்படிப்பட்ட அன்பு தேவனிடம் உள்ளதா? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வோம். ஒருவேளை நம்முடைய ரட்சிப்புக்கு முன்பாக நாம் நமது மாம்ச இச்சையின்படி நடந்து மாம்சமும், மனசும் விரும்பினவைகளை செய்து இருப்போம் (எபே 2 : 3). ஆனால், கிறிஸ்துவின் அன்பு நமக்குள் ஊற்றப்படும்போது தாவீதைப் போல் தேவனிடத்திலும், அவருடைய சபை மக்களிடத்திலும் வாஞ்சையாய் இருப்போம். சிலருக்குப் பணத்தின் மீது நாட்டம் இருக்கிறது. பண ஆசை தன்னை உடையவர்களின் உயிரை வாங்கும் என்று வேதத்தில் காண்கிறோம். யோபு 31 : 27 ல் தன்னிடம் உள்ள செல்வத்தை நினைத்து ரகசியமாக சந்தோஷப்பட்டால் கூட அது நியாயதீர்ப்புக்கு ஏதுவானது என்று கூறுகிறார். நம்முடைய வசதி வாய்ப்புகள் பெருகும்போது நம்பிக்கையை ஆஸ்திகளின் மீது வைக்காமல் நம் மனம் நமக்கு அவற்றை தந்த தேவன் மீதே நாட்டமாய் இருக்க வேண்டும். I நாளா 29 : 2 , 3 ல் தாவீது தான் சேர்த்துவைத்திருந்த பொன் வெள்ளி அனைத்தையும் தேவலாயத்துக்குத் தர முன்வந்தான். அதற்குக் காரணம் தேவன்மீது அவன் வைத்திருந்த விசுவாசமும், நம்பிக்கையுமாகும். அப்படி என்ன நம்பிக்கை என்றால்? கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார், நான் தாழ்ச்சி அடையேன் என்பதே. நாமும் காணிக்கை விஷயத்தில் உற்சாகம் காண்பிப்போமாக.

தாவீதினுடைய நாட்டம் கர்த்தருடைய ஆலயத்தின் மீதே இருந்தது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் என்று நம்பினான். கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் என்று சந்தோஷப்பட்டான். அப்படிப்பட்டதான நம்பிக்கையும், சந்தோஷமும் சபை கூடுதலில் நமக்கு இருக்கின்றதா? ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது என்கிற அளவுக்கு அவனுடைய அன்பு தேவன் மீதும் அவருடைய ஆலயத்தின் மீதும் இருந்தது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வருஷத்திற்கு மூன்று முறை மட்டுமே பண்டிகைக்காக ஜனங்கள் கூடி வருவார்கள். அதைக் குறித்து தாவீது சொல்லும் போது கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாய் இருந்தேன் என்கிறார். எனக்கு அன்பானவர்களே! தேவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் நாம் சபை கூடி வந்தால் நிச்சயம் மகிழ்ச்சி நம் இருதயத்தில் தங்கும். தேவையற்ற கருத்து வேறுபாடுகளை ஊழியர்களிடமோ, சகோதர சகோதரிகளிடமோ நாம் ஏற்படுத்திக் கொள்ளும்போது சபைகூடுதல் மகிழ்ச்சி தராது. மேலும், தாவீது சொல்லும் போது எருசலேமே உன் அலங்கத்துக்குள்ளே சமாதானமும், உன் அரமணைக்குள்ளே சுகமும் இருப்பதாக என்று வேண்டிக்கொள்கிறார். இந்த வஞ்சக உலகத்தில் உண்மை சமாதானத்தை தேவன் சபையிலே வைத்திருக்கிறார் என்று அறியுங்கள் I நாளா 16 : 11 ல் கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள் அவர் சமூகத்தை நித்தமும் தேடுங்கள் என்று தாவீது வலியுறுத்துகிறார்.

தாமிது ராஜாவை விட இன்றைக்கு நீங்கள் மேலானவர்கள் என்று அறியுங்கள். வருடத்தில் மூன்றுமுறை அல்ல 52 முறை நாம் கூடி வரும் சிலாக்கியம் பெற்றுள்ளோம். நாம் ராஜாக்களும், ஆசாரியருமாயிருக்கிறோம் என்கிறார் பேதுரு. ஆக, தினந்தோறும் வேதவாசிப்பு, மற்றும் ஜெபிக்கும் வழக்கத்தைக் கைவிடாதிருப்போம். அதை மனவிருப்பத்தோடே, வாஞ்சையாய் செய்யப் பழகுவோம். நம்முடைய கவனத்தை நம் பிரச்சனை மீதல்ல, அந்தப் பிரச்சனையை விட பெரியவரான பரலோக தேவன் மீது நமது கவனத்தைத் திருப்புவோம். பரலோகில் உம்மை அல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை (சங் 73 : 25). நம் ஆசை, விருப்பங்கள் தேவன் மீதும், சபைகூடுதலின் மீதும் உள்ளதா? அல்லது உலகப்பிரகார பொருள், பதவி, புகழ் போன்றவற்றில் ஆசைப்படுகிறோமா? அநேக நேரங்களில் தேவன் நம் ஜெபத்திற்கு செவி கொடுப்பதில்லை என்று அங்கலாய்க்கிறோம். ஆனால் நாம் கூடி வந்து அவரைத் தொழுது கொண்டு விண்ணப்பம் பண்ணும் போது தான் தேவன் நமக்கு செவி கொடுப்பார் என்கிறார் (எரேமியா 29 : 12). அது மாத்திரம் அல்ல, நாம் அப்படி கூடி வந்து தேவனைத் தேடும்போது யுத்தமில்லாத இளைப்பாறுதலை தேவன் கட்டளையிடுவார் என்று காண்கிறோம்

(2 நாளா 15 : 15). நம்முடைய வாழ்க்கையிலும் குடும்பங்களிலும் நாம் அநேகப் பிரச்சனைகளைச் சந்திக்கிறோம். உறவுகள் சில தேவையற்ற பிரச்சனைகளைக் கொண்டு வரலாம். இவற்றிலிருந்தெல்லாம் நம்மைப்பாதுகாத்துக் கொள்ள நாம் தேவனைத் தேடுவது அவசியமாகிறது.

எப்படி தேவனைத் தேடலாம்? சபை கூடுதலை தவறாமல் நேரப்படி நாம் கூடுவதின் மூலம் அவரைத் தேடுகிறோம். வேதம் வாசித்து, ஜெபித்து அவரைத்துதிக்கும்போதும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின் மூலமாகவும் தேவனைத் தேடுகிறோம். நம் மாம்சமே நம்முடைய ஆவிக்கு விரோதமாகப் போராடும் போது நாம் தேவனைத் தேடுவது தடைபடலாம். அதையெல்லாம் மேற்கொள்ளவே தாமிது **நான் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன் என்று தன் ஆசையை வெளிப்படுத்துகிறார். எதற்காக என்று பார்க்கும் போது கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாக** என்று கூறுகிறார். நமது தேவனுடைய பெயர்களில் ஒன்று, அவர் **மகிமையின் தேவன்** என்று ஸ்தேவான் தன் உரையின் ஆரம்பத்திலே குறிப்பிடுகிறார். உலகில் உள்ள எந்த தேவர்களிலும் இவரே பெரியவர். இஸ்ரேயேல் ஜனங்களை உருவாக்கி பத்துவித வாதைகளால் எகிப்தியரை வாதித்து விடுதலை வாங்கி, செங்கடல் பிளப்பு, வனாந்திர பிரயாணத்தில் அக்கினி, மேகஸ்தம் பங்களினால் வழி நடத்துதல் மேலும் மன்னா, காடை, எதிரிகளிடமிருந்து அற்புத பாதுகாப்பு என நம் தேவனுடைய மகிமையை சொல்லிக்கொண்டே போகலாம். அதையெல்லாம் எண்ணியே தாவீது அவருடைய அலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாக ஆசைப்படுகிறார். அதைத்தான் யோபு சொல்லும்போது **நமது தேவன் ஆராய்ந்து முடியாத பெரியக்காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிறவர் என்று வெளிப்படுத்துகிறார்** (யோபு 9 : 10). தாவீதின் வாஞ்சை போல நமக்கும் இருக்க வேண்டும்.

**அப்போஸ்தல உபதேசத்தில் சில காரியங்களை நாட அறிவுறுத்தப்படுகிறோம்.**

* எல்லா மனுஷர் முன்பாக யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்.
* வேறே அஸ்திபாரத்தில் அல்ல புதிய இடத்தில் சுவிசேஷம் சொல்ல நாடுங்கள்.
* அன்பை நாடுங்கள். ரோமர் 15 : 21
* கர்த்தருக்குப் பிரியமாயிருக்க நாடுங்கள் 2 கொரி 5 : 9
* தீமைக்கு தீமை செய்யாதபடி நன்மை செய்ய நாடுங்கள் ஹ தெச 5 : 15.

மற்றும் தேவபக்தி, விசுவாசம், அன்பு, பொறுமை, சாந்த குணம் அடையும்படியாக யாவரோடும் சமாதானமாயிருக்கவும் நாடுங்கள் என்றும் ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ள அநேகக் காரியங்களை நாம் நாடி தாவீதைப் போல தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாய் இருக்கப் பிரயாசப்படுவோம். தேவகிருபை நம் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

# வேதாகமம் மட்டும் போதுமா?

Bro. ஜெர்ரி பார்பர்

**வே**தாகமத்தில் கூறப்பட்டுள்ள நல்ல பல காரியங்களை நாம் அவசியம் படிக்க வேண்டும். ஆனால், நமது வாழ்வு பற்றி கர்த்தருடைய கட்டளைகளைப் புரிந்து கொள்ள வேறு சில சட்ட நூல்களும் உதவிகளும் நமக்குத் தேவையில்லையா? இப்படி ஒரு கேள்வியை இன்று பலர் கேட்கிறார்கள்.

இக்கேள்விக்குச் சரியான விடை காண அதே வேதாகமத்தைத் தான் நாம் நாட வேண்டும். கர்த்தருடைய சுவிசேஷத்தில் ( வேதாகமம் ) காணப்படாத வேறு சில காரியங்களையும் நாம் செய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறாரா என்பதை அறிய அவருடைய வசனங்கள் என்ன கூறுகின்றன என்பதைப் பார்ப்போமா?

**வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது** என்பதாக II தீமோத்தேயு 3 : 16, 17 வசனங்களில் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. வேதாகமம் நமக்கு எல்லா நற்கிரியைகளையும் கொடுப்பதாக இருப்பின், அதில் கூறப்படாத எந்தக் காரியத்தைச் செய்து தேவனை பிரியப்படுத்த வேண்டும் என அவர் விரும்புகிறார்?

**சுயஸதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம்** என யாக்கோபு 1 : 25ல் கூறப்பட்டுள்ளது. **பூரணம்** என்ற வார்த்தைக்கு **எதுவும் விட்டுப் போகாத முழுமையான** என பொருள். எதுவும் விட்டுப் போகாத தேவனுடைய விருப்பத்தை அறிய வேறு எந்த புதிய செய்தியை நாம் நாட வேண்டும்?

**தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டியவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது** என்பதாக பேதுரு கிறிஸ்தவர்களுக்கு எழுதியுள்ளார் ( 2 பேதுரு 1 : 3 ). ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் ஏற்கனவே தேவன் நமக்குத் தந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. வேறு சட்ட நூல்கள் தமக்குத் தேவையா? அல்லது வேறு எந்த உதவியை நாம் எதிர்பார்க்க வேண்டும்?

கர்த்தருடைய வசனம் சத்தியமானது (யோவான் 17 : 17). வசனத்தைப் பூரணமாக தந்துள்ளதாக அவர் கூறியிருக்கிறார். அவர் கூறுவதில் நாம் நிலைத்திருப்போம்.

# உங்களுடைய பக்தியை சோதித்தறியுங்கள்

Bro. பிரான்சிஸ் டேவிட்

**ப**ரிசுத்த வேதாகமத்திலுள்ள புத்தகங்களில் ஒரு சிறிய புத்தகமாக யாக்கோபு எழுதின நிருபம் இந்தாலும், இது நமக்குப் பயன்தரும் பல சிறப்பான செய்திகளைத் தனக்குள்ளாக அடக்கியுள்ளது. கிறிஸ்தவம் ஒரு அன்றாட மார்க்கம் என்பதை இந்நூல் வலியுறுத்திக் கூறுகிறது. அநேக சமயங்களில் நாம் நம்முடைய மார்க்கத்தைக் குறித்து பெருமை பாராட்டுகிறோம். ஆனால், நம்முடைய வாழ்வில் அதை நடைமுறை படுத்துகிறோமா? நாம், நமது மார்க்க நீதிகளை நடைமுறைப்படுத்தாவிட்டால், நம்முடைய மார்க்கம் வீணான மார்க்கம் என்று யாக்கோபு கூறுகிறார்.

யாக்கோபு 1 : 26 இப்படிச் சொல்கிறது. **உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தியுள்ளவன் என்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்** ஒரு கிறிஸ்தவனாயிருந்து நாம் மற்றவர்களிடம் பேசும் போது, நம்முடைய மார்க்கம் எதை வெளிப்படுத்துகிறது? ஜனங்களுடனான நம்முடைய அன்றாட பழக்க வழக்கங்கள் எதை பிரதிபலிக்கிறது?

நம்முடைய மார்க்கம் இயேசுகிறிஸ்துவினுடைய வாழ்க்கை மற்றும் அவருடைய கிரியைகளை அடிப்படையாகக் கொண்டது. அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறபடியால் ஒவ்வொரு நாளும் நாம் அவரைப் பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம் ( யோவா. 14 : 6 ). இயேசு கிறிஸ்துவை பின்பற்றுவது தான் கிறிஸ்தவமாகும். கிறிஸ்து நம்முடைய அன்றாட வாழ்வில் காணப்படுவராக!.

யாக்கோபு மூன்றாம் அதிகாரத்தில் நாவைக் குறித்து ஆசிரியர் பேசுகிறார். சரீரத்தில் நாவு சிறிய அவயவமாயிருந்தும், அநேக சமயங்களில் அதை அடக்குவது மிகுந்த சிரமம் என்று கூறுகிறார். **பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும் படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழுச் சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும் கடுங்காற்றுகளால் அடிபட்டாலும் அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான**

**சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும், பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள் சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டை கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புத்தான்.**

**அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது. சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், நீர்வாழும் ஜெந்துகள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷ சுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனிதனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே இப்படியிருக்கலாகாது.** ( யாக். 3 : 3-10 ). எவ்வளவு நேர்த்தியாக யாக்கோபு ஆசிரியர் நாவின் இயல்பை விவரித்திருக்கிறார் பாருங்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய அன்றாட வாழ்வில் நாவுகளை உபயோகிக்கும் போது மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நாம் மற்றவர்களோடு பேசும்போது, நாம் யார் என்பதை அது வெளிப்படுத்தும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய நாவு விஷயத்தில் எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். **கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம் பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜன முண்டாக்கும்படி பேசுங்கள்** ( எபே. 4 : 29 ) என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது.

நம்முடைய கர்த்தர் ஒருபோதும் தன்னுடைய நாவை வீணாக உபயோகித்ததில்லை. ஏனெனில், **அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை** என்று அவரைப் பற்றி எழுதியுள்ளது (I பேது. 2 : 22). மேலும், பேதுரு இவ்விதம்

கூறுகிறார். **ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து....** (1பேது 3 : 10). இன்னும் அப்போஸ்தலன் பவுல் பிலிப்பியரில், **....கிறிஸ்துவின் சுவிஷேத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்** என்கிறார் (பிலி. 1 : 27).

அடுத்து, முக்கியமாக நாம் பார்க்க வேண்டுவது யாதெனில், மற்றவர்களுடனான நம்முடைய காரியத்தில் நாம் எப்பொழுதும் மிகுந்த கவனமாக இருக்க வேண்டுமென்பது. தன்னால் ஆனமட்டும், நன்முறையில் நடந்து கொள்ள வேண்டும். தேவனுடைய பிள்ளைகளாயிருந்து நற்கிரியைகளைச் செய்யும்படியாய் நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். எபேசியர் 2 : 10ல் பவுல் இவ்விதம் கூறுகிறார். **ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள், சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்.....** நாம் மற்றவர்களோடு பழகும்போது, நம்முடைய ஆளுமை எதைப் பிரதிபலிக்கிறது? நாம் மோசமான, அசிங்கமான மனோபாவம் உள்ளவர்கள் என்று பிரதிபலிக்குமா? இல்லை. நாம் உண்மையாகவே கிறிஸ்துவின் சிந்தையுள்ளவர்களாயிருந்தால், நாம் யாரை விசுவாசிக்கிறோமோ அல்லது நாம் யாருக்குச் சொந்தமோ அவருடைய தன்மையை பிரதிபலிப்போம். **கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலுமிருக்கக்கடவது** ( பிலி. 2 : 5 ). நமக்கு உண்மையாகவே கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறதா?

கிறிஸ்தவர்கள் முற்றிலும் வித்தியாசமானவர்கள் (1பேது. 2 தீத் 2 : 12 , 14 ) அவர்கள் வேறுபட்டவர்கள் ( 2 கொரி 6 : 17 ) அவர்கள் உலகத்துக்கு வெளிச்சமும், பூமிக்கு உப்புமானவர்கள். இயேசுக்கிறிஸ்து இதை மலைப்பிரசங்கத்தில் சொல்லியுள்ளார். மலையின் மேலிருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. ( ஆம், உங்கள் நற்கிரியைகளும், மனுஷரால் பார்க்கப்படும், மறைந்திருக்கமாட்டாது ).... தொடர்ந்து, இயேசு **இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது** என்றார் (மத். 5 : 13-14).

நம்முடைய கர்த்தர் பூமியிலே வாழ்ந்த எல்லோரிலும் மேலானவராயிருந்து, மிகச் சிறந்த முன்மாதிரியை வைத்துள்ளார். அவருடைய வாழ்க்கை நற்கிரியைகளால் நிறைந்திருக்கிறது. ஜனங்களுடனான அவருடைய பழக்கமும், செயல்பாடும் போற்றுதற்குரியது. எப்பொழுதும் சிறந்ததையே செய்தார். அவருடைய சித்தத்தின் வழியில் நாம் நடப்போமாக! நாம் அப்படிச் செய்வோமானால், கிறிஸ்தவத்தை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க எப்பிரச்சனையும் இராது. நாம் அவருடைய மாதிரியைப் பின்பற்றும்படி நமக்காகப் பாடுகள் பட்டு, நமக்கு மாதிரியைப் பின் வைத்துச் சென்றுள்ளார்.

## நாளும் நடப்பும்

- சமையல் எரிவாயு உற்பத்திக்கு ரூ.30,000 கோடி முதலீடு, மத்திய அரசு பரிசீலனை – பெட்ரோலியத்துறை அமைச்சர்.
- ஸ்மார்ட்போன் பயன்படுத்துவதால் குழந்தைகளின் பேச்சுத்திறன் பாதிக்கும் – விஞ்ஞானிகள் ஆய்வு.
- தமிழகத்தில் 9.73 லட்சம் குடும்பங்களுக்கு வீடுகள் தேவை – அமைச்சர்.
- மின்னனு குடும்ப அட்டை : புகைப்படம் சரியில்லாதோர் விபரம், அந்தந்தப் பகுதி நியாயவிலை கடைகளில் வெளியீடு.
- வறட்சி எதிரொலி : நிகழாண்டில் தானிய உற்பத்தி 50% குறையும் – தமிழக வேளாண்மைத் துறை.
- அக்னி நட்சத்திரம் : தமிழகத்தில் மே 4 – ம் தேதி தொடங்கி, 29 – ம் தேதி முடிவடைகிறது.
- சுற்றுலாத் துறையில் தமிழகம் தொடர்ந்து முதலிடம் – அமைச்சர்.